**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 9 ஆம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.418/2021**
(CNR No.TNTP01-007961-2021)

1) V.விநாயகமூர்த்தி,
த/பெ.லேட். வைரம்,
கதவு எண்.2/224,
அதவத்தூர் கிழக்கு,
பள்ளக்காடு,
திருச்சிராப்பள்ளி.

2) M.வளர்மதி,
க/பெ.லேட்.மாணிக்கம்,
கதவு எண்.42, அதவத்தூர் கிழக்கு,
பள்ளக்காடு,
திருச்சிராப்பள்ளி.

3) M.இராஜாம்பாள்,
த/பெ. லேட்.மாணிக்கம்,
கதவு எண்.42,
அதவத்தூர் கிழக்கு,
பள்ளக்காடு,
திருச்சிராப்பள்ளி. ... வாதிகள்

/ எதிர் /

1. V.பாப்பா,
க/பெ லேட். வைரன்,
பள்ளக்காடு,
அதவத்தூர் கிழக்கு,
ஸ்ரீரங்கம் தாலுகா,
திருச்சி மாவட்டம்.

2. V.கணபதி,
த/பெ லேட் வைரன்,
பள்ளக்காடு,
அதவத்தூர் கிழக்கு,
ஸ்ரீரங்கம் தாலுகா,
திருச்சி மாவட்டம்.

3. V.ரெத்தினம்,
த/பெ.தங்கையன்,
அழகர் தெரு
அதவத்தூர் கிழக்கு,
ஸ்ரீரங்கம் தாலுகா,
திருச்சி மாவட்டம். ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 29.06.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஜான் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகேசன் அவர்களும் முன்னிலையாகியும், வழக்கை நடத்த, வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கிடும்

## தீர்ப்புரை

1.1) வாதிகள் தாவா சொத்தை 5 சம பாகங்களாகப் பிரித்து, அதில், தங்களுக்குண்டான ஐந்தில் இரண்டு பாகம் (2/5) உண்டு என்று பாகப்பிரிவினைக்கு ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும், பிறகு, அதனை அனுசரித்து ஒரு இறுதிநிலை தீர்ப்பணை பிறப்பிக்குமாறும்,

1.2) பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அதிகாரம் பெற்ற முகவர்களோ தாவாசொத்து தொடர்பாக வாதிகளின் பங்கினை விற்பனை, தானம், ஈடு, ஒத்தி மற்றும் சார்பதிவாளர் ஆவணங்களில் வாதிகளின் பங்கை பொறுத்து, எவ்வித வில்லகங்களோ, பெயர் மாற்றமோ செய்ய கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:</u>

2.1) ஆதியில் வாதிகளின் பாட்டனாரான முத்துவீரன் என்பவரது முழு பாத்தியத்தில் இருந்தும், பின்னிட்டு, 22.04.1958 ஆம் ஆண்டு, வைரன் மற்றும் அவரது சகோதரர்களுக்குள் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திர ஆவண எண்.1385/1958 என்ற ஆவணத்தின் மூலம் அடைந்த சொத்துக்களைப் பொறுத்து, வைரன் என்பவர் எவ்வித பாகப்பிரிவினையும் செய்து வைக்காத நிலையிலும், வேறு எவ்வித பாக ஆவணங்களும் எழுதி வைக்காத நிலையில், கடந்த 04.04.1998 ஆம் தேதி இறந்துபோன வைரன் என்பவரின் வாரிசுதாரர்களாகிய வாதிகளும் மற்றும் பிரதிவாதிகளும் இந்நாள்வரை தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொள்ளாமல் கூட்டுக் குடும்பச்சொத்துக்களாக அனுபவித்து வருகின்றனர்.

2.2) இந்நிலையில், இறந்துபோன வைரன் என்பவருக்கு மேற்கண்ட பாகபாத்தியத்தின் மூலம் கிடைக்கப்பெற்று, முழு உரிமை பாத்தியத்தில் இருந்து

வந்த சொத்துக்களான பட்டா எண்.1648–ல் கட்டுப்பட்ட ஏக்.2.57 செண்ட் மற்றும் பட்டா எண்.1641–ல் கட்டுப்பட்டுள்ள ஏக்.0.96 செண்ட் சொத்துக்களைப் பொறுத்து, வைரன் என்பவர் கடந்த 04.04.1998 ஆம் தேதி இறப்பிற்கு பின்னிட்டு, மேற்படி சொத்துகள் தொடர்பாக எவ்வித பாகப் பிரிவினையும் செய்து வைக்காத நிலையிலும், எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காத நிலையிலும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பெயரில் கூட்டுப் பட்டா ஏற்பட்டுள்ளது.

2.3) இந்நிலையில், 1ம் வாதி தனது பணி நிமித்தமாக கேரளாவிற்கு கடந்த 1996 ஆம் ஆண்டு சென்ற பின்னரும், தன்னுடைய மாத சம்பளத்தில் ஒரு தொகையை கூட்டுக்குடும்பச் சொத்திற்கு செலவிடுவதற்காக 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். மேலும், 1ம் வாதி கேரளாவில் இருந்த வரையில், தனது கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து வரும் வருமானத்திற்கு வரவு செலவு கணக்கை 1ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு, தனக்கு எந்த வரவு செலவும் தெரியாது என்றும், எல்லா வரவு செலவுகளையும் தனது மகனான 2ம் பிரதிவாதி தான் பார்த்துக்கொள்கிறார் அவரிடம் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்லியுள்ளார். ஆனால், 1ம் பிரதிவாதி எந்தவித பதிலும் சொல்லாமல் தொடர்ந்து காலந்தாழ்த்தி வந்துள்ளார்.

2.4) இந்நிலையில், 1ம் வாதி விநாயகமூர்த்தி, கடந்த 2003 ஆம் ஆண்டு திருமணத்திற்கு பின்னிட்டும், கடந்த 2007 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து திருச்சிக்கு வந்த பின்னர் தன்னுடைய கூட்டுக்குடும்ப பாகத்திலிருந்து வந்த

வருமானத்தை கேட்டபோது, 1, 2 பிரதிவாதிகள் தற்சமயம் கூட்டுக்குடும்பச் சொத்தில் வெறும் கடன் மட்டுமே இருப்பதாக பொய் சொல்லி, 1ம் வாதியின் கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து வந்த எந்த வருமானத்தையும் தரவில்லை. இதனால் வேறுவழியின்றி கூட்டுக், குடும்பச்சொத்தில் தனக்குண்டான பாகத்தை பிரித்துத்தரச் சொல்லி 1, 2 பிரதிவாதிகளிடம் கேட்டபோது, அதற்கும் பிரித்துத் தருவதாகச் சொல்லி நாளது தேதி வரை காலந்தாழ்த்தி வருகிறார்கள். இதுசம்பந்தமாக பலமுறை ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் வாதிகள் தங்களுக்குரிய பாகத்தை பிரித்துத்தரச் சொல்லி பிரதிவாதிகளிடம் கேட்டபோது, அப்போதைக்கு பிரித்து தருவதாகச் சொல்லிவிட்டு, பின்னிட்டு, சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் வரும்போதெல்லாம் ஏதாவது காரணம் சொல்லி பிரிக்க விடாமல் பிரதிவாதிகள் தடுத்து விடுகின்றனர்.

2.5) மேலும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தந்தையாரான வைரன் என்பவர் அரசு மருத்துவமனையில் கிளரிக்கல் வேலை செய்து, அவரது பணி ஓய்வு பணமான ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பணத்தையும், 1,2,3 பிரதிவாதிகள் மட்டுமே பயன்படுத்தியும், வைரனின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது பென்சன் தொகையான ரூ.15,000/- பணத்தையும், 1, 2, 3 பிரதிவாதிகள் மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், 1 ஆம் வாதி, கடந்த 2007 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து, திருச்சி வந்த பின்னர், தனது குடும்பத்துடன் தனது வயதான தாயாரான 1ம் பிரதிவாதியை கவனித்துக்கொள்ள தயாராக இருந்தும்,

அதற்கும் 2, 3 ஆம் பிரதிவாதிகள் அனுமதிக்காமல் வேண்டுமென்றே கூட்டுக்குடும்ப சொத்தை தவறான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டி 1ம் வாதியை தடுத்துள்ளார்கள். மேலும், 2ம் பிரதிவாதி கணபதி என்பவர் பாகம் பிரிக்காத சொத்தில் வாதிகள் சொத்திற்குள் நுழையக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் சொத்தின் முன்பகுதியில் தாவா சொத்துக்களில் உள்ள பாதையை மறித்து அவருடைய வீட்டை கட்டிக்கொண்டு வாதிகள் தாவா சொத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து வருகிறார்.

2.6) மேலும், 2வது வாதியின் கணவர் மாணிக்கம் கடந்த 25.12.2019 ஆம் தேதி இறப்பிற்கு பின்னிட்டு, கூட்டுக்குடும்ப சொத்தில் அவருக்குண்டான பாகத்தை பிரித்துத் தரச்சொல்லி, பிரதிவாதிகளிடம் கடந்த 25.01.2020 அன்று கேட்டபோது, பிரதிவாதிகள் பிரித்துத் தருவதாகச் சொல்லியும் பிரித்துத் தரவில்லை. இதனால், வாதிகள் தரப்பில் கடந்த 06.05.2021 அன்று சோமரசம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அதன்பேரில் நடைபெற்ற விசாரணையில், கடந்த 08.05.2021 ஆம் தேதி சோமரம்பேட்டை காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் ஆஜராகி, வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து தருவதாகச் சொல்லியும், அதன்படி செய்யாமல் இந்நாள்வரையில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு கூட்டுக்குடும்ப பாக பாத்தியங்களை பிரித்துத்தராமலும், கூட்டுக்குடும்ப பாக சொத்தின் மூலம் வரும் வருமானத்தையும் தராமல் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறார்கள்.

2.7) மேலும், கூட்டுக்குடும்பச் சொத்துக்களில் பிரதிவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் 45 சவரன் நகைகள் உள்ளன. மேற்கண்ட சொத்துக்களில் 1ம் வாதிக்குச் சொந்தமானதும் திருமணத்திற்கு சீர் செய்து திரும்ப பெற்றுக்கொண்டதுமான 5 பவுன் நகையை 1ம் வாதிக்கு கொடுக்கும்படியும், மற்றும் மீதமுள்ள கூட்டுக் குடும்பச்சொத்தான 40 பவுன் நகைகளில் தலா 5 ல் 2 பங்கினையும், வாதிகளுக்கு பிரித்துத்தரக் கோரியும், பிரதிவாதிகள் தர மறுத்து வருகிறார்கள். இந்நிலையில், வாதிகள் கடந்த 24.08.2021 அன்றும், மற்றும் பலமுறை நேரில் சென்று பிரதிவாதிகளிடம் பாகம் பிரிக்கச்சொல்லி முறையிட்டும் யாருக்கும் கட்டுப்படாமல் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் என்றும், மற்றும் மேற்கண்ட கூட்டுக்குடும்பச் சொத்துக்களில் உள்ள தோப்பு மற்றும் விவசாயம் மற்றும் பூ மூலம் கிடைக்கும் வருட வருமானத்தையும் யாருக்கும் தரமுடியாது என்று மறுத்து வருகிறார்கள். மேலும், மேற்கண்ட பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்பச் சொத்துக்களில் உள்ள தோப்பு மற்றும் விவசாயம் மற்றும் பூ மூலம் வரும் ஆண்டு வருமானம் சுமார் 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்)-த்தையும், 1, 2, 3 பிரதிவாதிகளே எடுத்துக்கொண்டு, பாக பணத்தையும் கொடுக்காமல் இன்றளவும் இருந்து வருகிறார்கள். மேற்கண்ட பாகபாத்தியத்துக்குரிய பணத்தை பெற்றுக்கொள்ள வாதிகள் பின்னிட்டு வழக்கிட உரிமையுண்டு.

2.8) இந்நிலையில், மேற்படி வழக்கில் பங்குதாரரான மாணிக்கம் என்பவர் கடந்த 25.12.2019 ஆம் தேதியன்று இறந்துவிட்டபடியால், மாணிக்கத்தின் மகன்

ராஜலிங்கம் என்பவர் கடந்த 21.12.2016 அன்று இறந்துவிட்டபடியினாலும், மாணிக்கத்தின் வாரிசுகளான அவரது மனைவி வளர்மதி மற்றும் மகள் இராஜாம்பாள் ஆகியோர் 2 மற்றும் 3–ம் வாதிகளாக சேர்க்கப்பட்டு, மாணிக்கத்திற்கு சேரவேண்டிய ஒரு பங்கில் அவரது வாரிசுகள் பிரித்துக்கொள்ள வேண்டியது. மேலும், 1ம் வாதி மற்றும் 1,2,3 ஆம் பிரதிவாதிகள் ஆகியோர் தாவா சொத்தில் 1/5 பங்கும், 2 மற்றும் 3 வாதிகளுக்கு சேர்த்து 1/5 பங்கும் கிடைக்கத்தக்கது.

2.9) மேலும், வாதிகள் தங்களுக்குரிய பாக பாத்தியத்தை பிரித்துத் தர வேண்டி பிரதிவாதிகளுக்கு கடந்த 06.09.2021 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள். வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பல பொய்யான சங்கதிகள் அடங்கிய பதில் அறிவிப்பு ஒன்று அனுப்பியுள்ளார்கள். இதன் பின்னிட்டும் வாதிகள் வழக்கு சொத்தில் வாதிகளின் பங்கினை கடந்த 10.10.2021 அன்று பிரதிவாதிகளிடம் கேட்டும் பிரதிவாதிகள் பாகம் பிரித்து தரமுடியாது என்றும் உங்களால் முடிந்தால் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறியதன் மூலம் வாதிகள் இந்த வழக்கினை அவசரகதியில் தாவா சொத்தில் உள்ள தங்களது பங்கினை தற்காத்துக்கொள்ள இந்த பாகப்பிரிவினை வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி பத்திகளில் கண்டுள்ள சங்கதிகளின் வழி தாவாசொத்தில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு சொத்துக்களை பிரித்துத் தரமுடியாது என்றும், கூட்டுக் குடும்பச்

சொத்துகளிலிருந்து வரும் வருமானத்தையும் தரமுடியாது என்று கூறியுள்ளதால், இனி மேற்கொண்டும் மேற்படி சொத்துக்களை வாதிகள் பிரதிவாதிகளோடு சேர்ந்து கூட்டாக அனுபவிக்க இயலாத நிலையில் தாவா சொத்தில் தங்களுக்குரிய பங்கினை பிரித்து தரவேண்டி வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 1, 2, 3 ஆம் பிரதிவாதிகள் சட்டத்திற்கு புறம்பாகவும், வாதிகளின் சம்மதம் இல்லாமல் அரங்கேற்றிவரும் வில்லங்கங்களானது தொடர்ந்து நீடித்தால் வாதிகள் தங்களுடைய பங்கிற்கும் கேடு ஏற்படலாம் என்ற அச்சத்தில் தாவா சொத்தில் தங்களுக்குரிய பங்கினை பிரித்துக்கொடுக்கும் வரை மேற்படி பிரதிதிவாதிகள் தாவா சொத்துக்களை எந்த வித வில்லங்கங்ளும் செய்யக்கூடாது என்றும், அவர்களை தடுத்து நிறுத்திட ஏதுவாக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்க வேண்டியும் மற்றும் அசல் வழக்கின் வாதிகளுக்குரிய பங்கினையும் பாகம் பிரிக்கக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

3) <u>2,3 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்:</u>

3.1) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுக்கிறார்கள். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதிகளுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் 1ம் பிரதிவாதி பொய்யென மறுக்கிறார். மேலும், வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வாதிகளின்

முகவரியானது முற்றிலும் பொய்யானது என்றும், குறிப்பிட்டுள்ள முகவரியில் வாதிகள் தற்சமயம் வசித்து வரவில்லை என்றும் பிரதிவாதிகள் தெரிவிக்கிறார்.

3.2) 1ம் வாதி காலஞ்சென்ற வைரனின் மகன் என்பதையும் மற்றும் 2ம் வாதி காலஞ்சென்ற வைரன் மகன் மாணிக்கம் அவர்களின் மனைவியும் (மருமகள்) என்பதையும், பிரதிவாதி உண்மையென ஒத்துக்கொள்கிறார். உண்மையாதெனில், 1ம் பிரதிவாதியின் கணவரான காலஞ்சென்ற வைரன் அவர்களின் சுயசம்பாத்தியத்தை கொண்டு பட்டா எண்.1648–ல் கட்டுப்பட்ட ஏக். 2.57 சென்ட் மற்றும் பட்டா எண்.1641–ல் கட்டுப்பட்டுள்ள ஏக்.0.96 சென்ட் சொத்துக்களானது வாங்கப்பட்டு, கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதையும், மேலும், வாதி தன்னுடைய உழைப்பை மேற்படி கூட்டுக்குடும்ப சொத்திற்காக செலவிட்டுள்ளார் என்பதையும் பிரதிவாதிகள் வன்மையான மறுக்கிறார்.

3.3) உண்மையாதெனில், இதுநாள்வரையில் வாதி கூட்டு குடும்பத்திற்காக எந்தவிதமான செலவுகளும் செய்ததில்லை. மேலும், பணிநிமித்தமாக கேரளாவிற்கு கடந்த 1996ஆம் ஆண்டு சென்ற பின்னரும் தன்னுடைய மாத சம்பளம் அனைத்தையும் கூட்டுக்குடும்பச் சொத்திற்காக செலவிட்டுள்ளார் என்பதையும், மேலும், 1ம் பிரதிவாதியின் கணவரான வைரன் அரசு மருத்துவமனையில் கிளரிக்கல் வேலை செய்து, அவரது பணி ஓய்வு பணமான ரூ.10,00,000/–ஐயும், அவரது பென்சன் தொகையான ரூ.15,000/–ஐயும்

பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், கூட்டுக்குடும்ப சொத்துக்களில் 45 சவரன் நகைகள், வாதிக்கு சொந்தமானதும் திருமணத்திற்கு சீர் செய்து திரும்ப பெற்றுக்கொண்டதுமான 5 பவுன் நகையை வாதிகளுக்கு கொடுக்கும்படியும், மற்றும் மீதமுள்ள கூட்டுக்குடும்ப சொத்தான 40 பவுன் நகைகளில் தலா 5ல் 1 பங்கினையும் பிரித்து தர வேண்டும் என்பதையும் பிரதிவாதிகள் வன்மையாக மறுக்கிறார்.

3.4) மேற்படி பிரதிவாதிகள் பெரும் மனவேதனைக்கும் மனஉளைச்சலுக்கும் ஆளாக்கியதால், வயது முதிர்ந்த 1ம் பிரதிவாதிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை பிரதிவாதிகள் தெரிவித்துக்கொள்கிறார். மேலும், 1ம் பிரதிவாதியின் கணவர் வைரன் உடல்நிலை சரியில்லாமல் 1995ம் ஆண்டு VRS வாங்கிக்கொண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டார். அதனால், 1ம் பிரதிவாதி உடல்நிலை நிலை சரியில்லாத தனது கணவரையும் மற்றும் வாதியையும் சேர்ந்து குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, 1ம் பிரதிவாதியின் கணவருக்கு பாத்தியப்பட்ட கரடுமுரடாக இருந்த 70 சென்ட் நிலத்தை பிரதிவாதி தன் உழைப்பைக் கொண்டு அரும்பாடுபட்டு நிலத்தை தற்சமயம் சாகுபடி நிலமாக மாற்றியமைத்து, அதில் வரும் வருமானத்தைக் கொண்டு 1ம் வாதியையும் சேர்த்து வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில் 1ம் பிரதிவாதியின் கணவர் வைரன் அவர்கள் 1998ம் ஆண்டே இறந்துள்ளார்.

3.5) இந்நிலையில், சமயபுரம் அருகில் உள்ள ஈச்சம்பட்டியில் உள்ள ITI–ல் Donation மட்டும் ரூ.10,000/– செலுத்தியும் மற்றும் Diesel Mechanic தொழில் கல்விக்காக பிற கட்டணங்களை கட்டியும் படிக்க வைத்துள்ளார். மேலும், பிரபல TVS Company – Apprentice வேலைக்காக ரூ.5,000/–கட்டி வேலை வாங்கிக் கொடுத்துள்ளார். பணி உயர்வு காரணமாக கேரளா சென்றபோது ரூ.7,000/– வரை செலவு செய்தது மட்டுமல்லாமல், 2003–ம் ஆண்டிலேயே ரூ.1,50,000/– வரை செலவு செய்து வெகு சிறப்பாக திருமணத்தை செய்து வைத்துள்ளார். ஆனால், 1ம் வாதி திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் கேரளா சென்றவர், எப்போதாவது தான் 1வது வாதி மற்றும் குடும்பத்தாரை பார்க்க வந்து, பின்னிட்டு அன்றைய தினம் மாலையே திரும்பிக் சென்றுள்ளார்.

3.6) பிறகு, 2ம் பிரதிவாதி கடைசி மகன் கணபதி திருமணத்திற்கு கூட வாதி வரவில்லையென்றும், 2ம் பிரதிவாதியின் மனைவி உடல்நலக்குறைவு காரணமாக இறந்தபோது, இறப்பிற்கு கூட வாதி மற்றும் அவரை சார்ந்தவர்கள் வரவில்லை. மேலும், 1ம் பிரதிவாதியின் முதல் மகன் மாணிக்கம் அவர்களுக்கு உள்ளூரில் உறவினர் வீட்டில் பெண் எடுத்ததால், வாதியின் குடும்பத்திற்கு மாதா மாதம் ஒரு மூட்டை நெல், பால் மற்றும் மளிகை பொருட்கள் மற்றும் விவசாயத்தில் வரும் ஒரு பகுதி வருவாய் என அனைத்தையும், 1ம் பிரதிவாதி செய்துள்ளார். மேலும், வயலில் எந்த வேலை செய்தாலும், வாதி கூலி பெற்றுள்ளார் என்பதை பிரதிவாதி பெரும் மனவருத்தத்துடனும், வேதனையுடனும் வாதிக்கு தெரிவித்துக்கொள்கிறார்.

3.7) மேலும், 1ம் பிரதிவாதிக்கு அடிக்கடி உடல்நலம் பாதிக்கப்பட்டு மூன்று முறை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றபோது கூட வாதி, 1ம் பிரதிவாதி மீது எந்தவொரு அக்கறையும் காட்டவில்லை. 1ம் பிரதிவாதியை மருத்துவமனையில் ஒரு நாள் கூட வந்து பார்க்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதியின் கடைசி மகன் கணபதி மற்றும் மகள் ரத்தினம் மட்டுமே மூன்று முறையும் 1ம் பிரதிவாதியின் மீது கொண்ட அன்பின் காரணமாக அக்கறையுடன் பிற இடங்களில் கடன் வாங்கி, தனது தாயாரான 1ம் பிரதிவாதியை மருத்துவமனையில் சேர்ந்து கவனித்தும், 1ம் பிரதிவாதி உயிரை காப்பாற்றி தற்போது வரை பேணி காத்து வருகிறார் என்பதையும் பிரதிவாதிகள் தெரிவித்துக் கொள்கிறார்.

3.8) மேலும், 1, 2 வாதிகள் ஊரைவிட்டு சென்றுவிட்டார். அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் 1ம் பிரதிவாதி செய்து கொடுத்துள்ளார். வாதிகள், வயதான காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு யாதொரு சிறு உதவிகளையும் செய்யாமல், 1ம் பிரதிவாதியை அலட்சியப்படுத்தியும், அக்கறை இல்லாமல் இருந்து வருகிறார். 1ம் பிரதிவாதி, அவரது மகளான 2ம் பிரதிவாதியுடன் கஷ்ட ஜீவனம் செய்து வரும் நிலையில் தொடர்ந்து வாதி அவர்களை மனஉளைச்சலும் ஆளாக்கும் வண்ணம் பொய்யான தகவல்களை தெரிவித்து மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள்.

3.9) மேலும், 1ம் பிரதிவாதி கரடுமுரடாக இருந்த இடத்தை விளைநிலமாக மாற்ற தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- முதல் 50

நாட்களுக்கு வேலையாட்கள் வைத்தும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தியும், கிணறுக்கு சுற்றுசுவர் கட்டிடம் அமைத்தும் ரூ.1,00,000/- வரை செலவு செய்துள்ளார். மேற்படி அனைத்து செலவுகளையும் 1ம் பிரதிவாதியின் மகள் ரெத்தினம், மகன் கணபதி ஆகியோர் மட்டுமே செலவு செய்ததாகவும், 1ம் வாதி விநாயகமூர்த்தியோ அல்லது 2ம் வாதியின் கணவரான மாணிக்கமோ அல்லது வளர்மதியோ எந்தவொரு செலவும் செய்தது கிடையாது என்றும், அதனால், 1ம் பிரதிவாதிக்கு பெரும் மனஉளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ஆளாக்கியதால், வயது முதிர்ந்த 1ம் பிரதிவாதிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதையும் தெரிவித்துள்ளனர்.

3.10) வயது முதிர்ந்த 1ம் பிரதிவாதியை உரிய முறையில் பேணி பராமரிக்காமல், 1ம் பிரதிவாதிக்கு மனஉளைச்சலையும், மனவேதனையையும் ஏற்படுத்தும் வண்ணம் 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது நியாயமற்ற முறையாகும் என்றும், 1வது பிரதிவாதியின் கணவரான வைரன் எந்தவொரு நகையும் வாங்கிக் கொடுத்தது கிடையாது என்றும், மேலும், 1ம் பிரதிவாதிக்கு அவரது பெற்றோர்கள் சீர்வரிசையாக செய்த தங்க நகைகளை அடகு வைத்து தான் மேற்படி நிலத்தை 1ம் வாதி சீரமைத்துள்ளார் என்றும், அந்த காலத்தில், 1ம் பிரதிவாதியின் கணவரான வைரன் அவர்களது மாத ஊதியத்தைக் கொண்டு எந்தவித அசையும், அசையா சொத்துக்கள் வாங்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கும், அவரது கணவருக்கும், 1ம் வாதி

மற்றும் பிற பிள்ளைகளை வளர்ப்பதற்கு மட்டுமே சரியாக இருந்தது என்றும் தெரிவித்துக்கொள்கிறார். ஆகவே, வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவாப்படி தீர்ப்பாகவும் வேண்டியுள்ளார்.

4) வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, வழக்கின் தீர்விற்காக 04.01.2023 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டன.

5) **<u>எழுவினாக்கள்:</u>**

1. தாவாசொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பது சரியா?
2. வாதிகள் கோரியபடி, பாகபிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை வழங்கத்தக்கதா ?
3. அவ்வாறு பாகம் கிடைக்கத்தக்கதெனில், வாதிகளுக்கு கிடைக்கும் பாகம் என்ன?
4. வேறு என்ன பரிகாரம் ?

6) வாதிகள் தரப்பில், விநாயகமூர்த்தி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், 2ம் பிரதிவாதி கணபதி என்பவர் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவர், குறுக்கு விசாரணைக்காக ஆஜராக பலமுறை வாய்தா போடப்பட்டு வாய்ப்பளித்தும்,

குறுக்கு விசாரணைக்கு நேரில் முன்னிலையாகாததால், 16.04.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி அவரது முதல் விசாரணை சாட்சியம் நீக்கறவு (eschewed) செய்யப்பட்டது. அதன்பிறகும் பலமுறை வாய்ப்பளித்தும், பிரதிவாதிகள் தரப்பில் வேறு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7) <u>எழுவினாக்கள் 1 முதல் 3:</u>

மேற்படி 3 எழுவினாக்களிலும், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவற்றுக்கு பொதுவாக விடையளிக்க வேண்டியுள்ளது.

8) வைரன் என்பவரின் மனைவி, 1ம் பிரதிவாதி பாப்பா என்பதும், அவருக்கு மொத்தம் 4 மகன்கள் என்பதும், அவர்கள் முறையே மாணிக்கம், ரெத்தினம், விநாயகமூர்த்தி, கணபதி என்பதும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவர்களில், விநாயகமூர்த்தி முதல் வாதி என்பதும், இறந்துபோன மாணிக்கத்தின் வாரிசுகளான வளர்மதி, இராஜாம்பாள் ஆகியவர்கள் தான் 2,3 வாதிகள் என்பதும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதேபோல், 1ம் வாதியின் சகோதரரான கணபதி 2ம் பிரதிவாதி என்பதும், மற்றொரு சகோதரரான ரெத்தினம் 3ம் பிரதிவாதி என்பதும் இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

9) வாதிகள் தரப்பில் தாவாசொத்துக்கள் வாதிகளின் தாத்தாவான முத்துவீரன் என்பவருக்கு பாத்தியப்பட்டு, 22.04.1958 தேதியில் ஆவண எண்.1385/198

என்ற பாகப்பிரிவினை பத்திரம் மூலம் 1ம் வாதியின் தந்தையான வைரன் மற்றும் அவரது சகோதரர்களுக்கு தாவாசொத்துக்கள் கிடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வைரனின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், வா.சா.1ன் தந்தையின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், பட்டா நகல்கள் வா.சா.4 முதல் 6 வரையும், வில்லங்கச் சான்று வா.சா.ஆ.7 ஆகவும், வா.சா.1ன் அண்ணன் மாணிக்கத்தின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.8 ஆகவும், மாணிக்கத்தின் மகள் இராஜலிங்கத்தின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.9 ஆகவும், வழக்கறிஞர் அறிவிபிப்பு வா.சா.ஆ.10 ஆகவும் அஞ்சலக ரசீதுகள் வா.சா.ஆ.11 வரிசையாகவும், பதிலறிவிப்பு வா.சா.ஆ.12 ஆகவும், வா.சா.1ன் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.13 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

10) மேற்படி ஆவணங்கள், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரையை பரிசீலிக்கையில், தாவாசொத்துக்கள் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலம், பாகப்பிரிவினையால் 1ம் வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தந்தையும், 1 ம் வாதியின் தந்தை வைரனுக்கு கிடைத்தது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட 1ம் வாதியை, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, மேற்படி சொத்துக்கள் இன்று வரை தன் அப்பா பெயரில் தான் உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் அவரது குறுக்கு விசாரணையில், கீழ்கண்டவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

*" தாவா சொத்துக்களை என் அப்பாவின் 5 வாரிசுகளுக்கும் தலா 1/5 பாகம் என்ற வீதத்தில் பிரித்து பிரதிவாதிகளுக்குரிய பாகத்தை கொடுக்க வேண்டும் என்றால் எனக்கும் சம்பந்தம். நான் தான் பாக பிரிவினை பிரிக்க விடாமல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் சர்வேயர் மூலம் அளந்து பிரிக்கவிடாமல் செய்தேன் என்றால் சரியல்ல. "*

11) எனவே, தாவாசொத்தில், வாதிகளுக்கும் 2/5 பாகம் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுதான் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. ஆனால், வாதிகள் தரப்பில் தாவாசொத்துக்கள் நீங்கலாக அவர்களது தந்தையான வைரன் என்பவரின் பணி ஓய்வு பணமான ரூ.10,00,000/—மற்றும் குடும்ப நகைகள் இருப்பதாகவும், குடும்ப வருமானமும் இருப்பதாகவும் ஒரு கட்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இதை பிரதிவாதிகள் மறுத்துள்ளனர். மேலும், ஓய்வூதிய பணம் மற்றும் குடும்ப நகைகள் தொடர்பான ஆவணங்களை, வாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், அவை வழக்குச் சொத்தாகவும் காட்டப்படவில்லை. அவ்வாறு வழக்குச் சொத்தாக காட்டப்படாத ஓய்வூதியப்பலன் மற்றும் நகைகள் தொடர்பாக இந்த வழக்கில் விரிவாக பரிசீலிக்க வேண்டிய அவசியமில்லை.

12) எனவே, வா.சா.1ன் சாட்சியத்திலிருந்தும், அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்தும், தாவாசொத்துக்கள் வாதிகளுக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதென எழுவினா 1–க்கு முடிவு செய்யப்படுகிறது. மேற்படி சொத்துக்கள் தொடர்பாக இதுவரை பாகம்பிரிவினை நடைபெறவில்லை என்பதை பிரதிவாதிகளே வா.சா.1 இடம் ஒப்புக்கொண்டு குறுக்கு விசாரணை செய்துள்ளதாலும், அதை மறுத்து வாய்மொழி சாட்சியம் முன்னிலைபடுத்தாததாலும், வாதிகளின் கோரிக்கை நிரூபிக்கப்பட்டுள்ளதென முடிவு செய்யப்படுகிறது.

13) எனவே, தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை, அவற்றின் தன்மை மற்றும் மதிப்பிற்கேற்ப 5 சம பாகங்களாகப் பிரித்து, அதில், 1ம் வாதிக்கு 1/5 பாகமும், 2,3 வாதிகளுக்கு பொதுவில் 1/5 பாகமும், பிரதிவாதிகளுக்கு தலா 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், ஆனால், வைரனின் மற்ற வாரிசுகளான பிரதிவாதிகள் தங்களுக்குரிய பாகத்தை ஒதுக்கீடு செய்ய, நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால், தற்போதைய நிலையில் அவர்களுக்கு பாகம் ஒதுக்கீடு செய்ய பரிகாரம் வழங்கத்தக்கதல்ல என **எழுவினாக்கள் 2 மற்றும்3 –**க்கு முடிவு செய்யப்படுகிறது.

**14) <u>எழுவினா 4:</u>**

மேலும் இந்த வழக்கில் வாதிகள் தரப்பில், முழுமையான பாகப்பிரிவினை ஏற்படும் வரை தாவா சொத்துக்களில், பிரதிவாதிகள், வாதிகளின் பங்கையும்

சேர்த்து வில்லங்கம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரப்பட்டுள்ளது. ஏற்கனவே, எழுவினாக்கள் 2,3 க்கு முடிவு செய்தபடி, தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை, அவற்றின் தன்மை மற்றும் மதிப்பிற்கேற்ப 5 சம பாகங்களாகப் பிரித்து, அதில், 1ம் வாதிக்கு 1/5 பாகமும், 2,3 வாதிகளுக்கு பொதுவில் 1/5 பாகமும் உள்ளது என்பதால் அவர்களது பாகத்தையும் சேர்த்து பாகப்பிரிவினை நடக்கும் வரை பிரதிவாதிகள், தாவாசொத்துக்களில் வில்லங்கம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், வாதிகளுக்கு வழங்கத்தக்கதென முடிவு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதியும், தரப்பினர்கள் உறவுமுறை கருதியும், இந்த வழக்கில் அவரவர் செலவுத்தொகையை, அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென **எழுவினா 4–**க்கு முடிவு செய்யப்படுகிறது.

**15)** **<u>முடிவாக,</u>**

இந்த வழக்கு பின்வருமாறு அனுமதிக்கப்படுகிறது.

1) தாவா 1,2 அயிட்ட சொத்துக்களை, அவற்றின் தன்மை மற்றும் மதிப்பிற்கேற்ப 5 சம பாகங்களாகப் பிரித்து, அதில், 1ம் வாதிக்கு 1/5 பாகமும், 2,3 வாதிகளுக்கு பொதுவில் 1/5 பாகமும், ஒதுக்கீடு செய்யத்தக்கதென, வாதிகளுக்கு ஆதரவாக பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) அவ்வாறு முழுமையான பாகப்பிரிவினை ஏற்படும் வரை, தாவா 1,2 அயிட்ட சொத்துக்களில், வாதிகளுக்குரிய 2/5 பங்கையும் சேர்த்து,

பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, வில்லங்கம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3) தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை, அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.09 14:05:45 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

வா.சா.1 விநாயகமூர்த்தி

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.04.1985 | பாகபிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் |
| வா.சா.ஆ.2 | 09.11.2018 | 1ம் வாதியின் தந்தை வைரனின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.3 | 03.12.2018 | 1ம் வாதியின் தந்தை வைரனின் வாரிசுச் சான்றிதழ் |
| வா.சா.ஆ.4 | -- | பட்டா எண்.1648 க்குரிய பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் |
| வா.சா.ஆ.5 | -- | பட்டா எண்.1641 க்குரிய பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | -- | 15.09.1980 முதல் 31.12.1990 வரையிலான வில்லங்கச் சான்று |
| வா.சா.ஆ.7 | -- | 01.01.1968 முதல் 31.12.1974 வரையிலான வில்லங்கச் சான்று |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 12.02.2020 | 2ம் வாதியின் கணவர் மாணிக்கத்தின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.9 | -- | 2ம் வாதியின் மகன் ராஜலிங்கத்தின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.10 | 06.09.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | -- | அஞ்சல ரசீதுகள் |
| வா.சா.ஆ.12 | 27.09.2021 | 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.13 | -- | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |

**பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

பி.வா.சா.1 கணபதி

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்: இல்லை**

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.09 14:05:52 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி**
**திருச்சிராப்பள்ளி.**